செய்தி வெளியீடு எண்.34-2016 நாள்: 16.06.2016

**விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 20.06.2016. உளுந்தூர்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு.சு.ஆறுமுகம் அவர்கள் தகவல்.**

*****

தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் 85 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், 22 அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், 461 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 அடிப்படை பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பிட்டர், டர்னர், மெஷினிஸ்ட், எலக்ட்ரீசியன், ஒயர்மேன், மோட்டார் மெக்கானிக், டிராப்ட்மேன் சிவில், வெல்டர், மெக்கானிக் டீசல், கம்யூட்டர் ஆப்பரேட்டர், டெய்லர் ஆகிய தொழிற்பிரிவுகளில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் சுமார் 30,000 சேர்க்கைக்கான இடங்கள் காலியாக உள்ளன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக வரவேற்கப்படுகிறது. தற்போது 27.05.2016 முதல் இந்த இணையதளம் மூலமாக எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு பயின்ற மாணவர்கள் விண்ணப்பித்து வருகின்றனர். விண்ணப்பிக்க கடைசி தேதி 20.06.2016. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் சேருவதற்கு ஆண்களுக்கு வயது வரம்பு 14 முதல் 40 வரை ஆகும். பெண்களுக்கு உச்ச வயதுவரம்பு இல்லை.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு கட்டணமின்றி பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு கீழ்க்காணும் சலுகைகள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

1) உதவித்தொகை மாதம் ரூ.500/-
2) பேருந்து கட்டணச் சலுகை.
3) மிதிவண்டி.
4) மடிக்கணினி.
5) பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்.
6) 2 செட் சீருடைகள் மற்றும்
7) 1 செட் காலணிகள் (ஷு)

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் சேரும் மாணவர்களுக்கு பயிற்சிக் கட்டணத்தை அரசே வழங்குகிறது. மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.12,000/-மும், கிராமப்புறத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.10,000/-மும் பயிற்சிக் கட்டணமாக அரசு வழங்குகிறது.

மேற்கண்ட இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து மாணவர்கள் தமிழகத்தின் 32 மாவட்டங்களில் எந்த ஒரு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் சேரலாம். இணையதளத்தில் விண்ணப்பிக்க அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் உதவி மையங்கள் (Help Desk) அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் உதவி மையங்கள் (Help Desk) மூலமாக தங்களுக்கு தேவையான விவரங்களையும், சந்தேகங்களையும் கேட்டு தெளிவு பெறலாம். இது தவிர மாணவர்கள் அரசு இ-சேவை மையங்கள் வாயிலாகவும் மேற்கண்ட இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் வழங்கப்படும் தொழிற்பயிற்சி விபரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணைய தளத்தில் தரப்பட்டுள்ளது. சேர்க்கைக்கான விளக்கக் குறிப்பேடு (Prospectus) சேர்க்கை நடைபெறும் முறைகள், மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், பயிற்சி முறைகள் ஆகிய அனைத்து விவரங்களும் இந்த இணையதளத்தில் தெளிவாக தரப்பட்டுள்ளது.

இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் தேர்ச்சி பெறுவோருக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகள் எளிதில் கிடைக்கிறது. உலக அளவில் திறன்மிக்க தொழிலாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால், இவ்வாறான தொழிற்பயிற்சி பெறுவோருக்கு வேலைவாய்ப்பு அதிக அளவில் உள்ளது. இந்த அரிய வாய்ப்பினை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.